★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆனி 20உ செவ்வாய் (3—7—56) ★ ★ வெளியூர்: ஆனி 21உ புதன் (4—7—56) [இதழ் 16

திராவிட நாட்டுச் செல்வம்

திருச்சூர், ஜுன் 30—

ஒரு நூக்கமரம் (ரோஸ்வுட்) ரூ. 34,155-க்கு விலை போயிற்றும்!

ஒரே மரம் இவ்வளவு பெரிய தொகைக்கு விற்கப்படுவது இதுவே முதல் முறையாம்!

இங்கிருந்து 20 மைல் தொலைவில் உள்ள சலகுடி என்ற கிராமத்தில் உள்ள காட்டிலாகா அலுவலகத்திற்கு பரம்பிக் குளம் காட்டிலிருந்து அது கொண்டு வரப்பட்டதாயும், அந்த

(4-ம் பக்கம் பார்க்க)

பண்டிதர் ஆட்சியில் ஒரு பஞ்சாப் படுகொலை

பெண்கள் மானபங்கப் படுத்தப்பட்டனர் - சிறுர் சித்திரவதை செய்யப்பட்டனர்

செஞ்சாலை முச்சந்தியில் மக்களை மடக்கி வைத்து தடி கொண்டு தாக்கினர்

காங்கிரஸ் அடியாட்களும் போலீஸ் துறையினரும் கூட்டாகச் செய்த பயங்கரம்!

பஞ்சாப் பத்திரிகைகளின் ஒருமித்தத் தகவல்

சமாதானப் பிரியர் அதிகாரத்தின் அலங்கோல நிலை

பஞ்சாப் மாகாணத்தில் மொழிவட்டார ஏற்பாட்டுக்கு எதிராகக் கிளர்ச்சிகள் நடைபெற்றவண்ணம் உள்ளன.

அத்தகு கிளர்ச்சிகளில், ஜலந்தர் மாவட்ட நகரான ஓஷியார்பூரில், ஜுன் 17-ல், பெருந்திரளான ஆர்ப்பாட்டக்காரர்களைப் போலீஸ் தடி கொண்டு தாக்கி இருக்கிறது.

'பழிவாங்கல் — மிருகத்தனம் — காட்டுமிராண்டித்தனம்'— என, இப்போலீஸ் தாக்குதலை, காங்கிரஸ் கட்சியினர் உள்பட முக்கிய பொதுவாழ்வினர் பலரும் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்திருந்த ஆண், பெண், சிறுர்கள் ஆக அனைவர்மீதும் பலாத்காரத்தைப் பிரயோகிக்க போலீஸ் துறையினரை ஏவியதுடன், சுற்றுப்புறங்களிலிருந்து பஞ்சாப் துணை மந்திரி அமர சிங் தலைமையில் காங்கிரஸ் கட்சியினரால் அழைக்கப்பட்டு மதுவெறியில் மூழ்கிக் கிடந்த அடியாட்களும் ஏவப்பட்டனர்.

மேற்படி குற்றச்சாட்டை ஓஷியார்பூர் நகரில் இருக்கும் பொறுப்பு வாய்ந்தவர்களும், உயர்ந்த அந்தஸ்திலுள்ள வியாபாரச் சங்க அதிகாரிகளும் அழுத்தந்திருத்தமாகக் கூறுகின்றனர்.

அவர்கள் கூறும் குற்றச்சாட்டின்படி, எதிர்ப்பு ஊர்வலத்தின் ஒரு பகுதியை மிகத் தந்திரமாக, மூன்று தெருக்கள் கூடும் இடமான செஞ்சாலை சந்திப்பிற்கு விரட்டி, ஊர்வலத்தில் இருந்தவர்கள் வெளியேற முடியாமல் பாதைகளைப் போலீஸ் மறித்துக்கொண்டு, சந்தேகத்திற்குத் துளியும் இடமில்லாத பெண்களையும், ஆண்களையும், சிறுர்களையும், கூலிக்கு அமர்த்தப்பட்ட அடியாட்களைக் கொண்டு தடியால் நையப் புடைத்தனர்.

இத்தாக்குதலை, 'பொறுப்பற்ற வெறிச்செயல்' என நடுநிலை பிறழாது செய்தி தரும் இதழ் எனப் புகழ்பெற்றுள்ள தலைசிறந்த ஏடு ஒன்று குறிப்பிட்டிருக்கிறது.

பற்பல வயதுடைய பெண்கள் மீது, சொல்லத்தகாத அக்கிரமச் செயல்களைப் புரிந்திருப்பதாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

வீதி வழியும், வீடுகளிலும் புகுந்துத் தப்பியோட முயன்ற சிறுர்களைத் துரத்தித் துரத்தித் தாக்கியுள்ளதாகவும் குறைகூறப்படுகிறது.

இப்பயங்கரச் சம்பவம் பற்றி தரப்பட்டுள்ள செய்திகள் அனைத்தும், இந்நிகழ்ச்சியை 1947-ல் நடைபெற்ற வகுப்பு வெறிச் செயல்களுடன் ஒப்பிட்டே தரப்பட்டுள்ளன.

அதுவுமன்றி, ஊர்வலத்தின் ஒரு பகுதியை செஞ்சாலை முச்சந்தியில் மடக்கி வளைத்துத் தாக்கிய போலீசின் பயங்கரத் திறமையை, 1919-ல் நடைபெற்ற ஜாலியன் வாலாபாக் படுகொலையுடன் ஒப்பிட்டுக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்தை, நீதிபதியைக் கொண்டு விசாரிக்க வேண்டும் என்ற கோரிக்கை பரவலாக எழுந்தது. அதற்கு இணங்க பஞ்சாப் காங்கிரஸ் ஆட்சி மறுத்து விட்டது.

'காமன்வெல்த்' பல்கலைக் கழகங்கள் மாநாடு

காமன்வெல்த் பல்கலைக் கழகங்கள் மாநாடு ஒன்று ஜுலைத் திங்கள் 9-ந் தேதி முதல் 24-ந் தேதிவரை இலண்டனிலும், பர்மிங்காமிலுமாக நடைபெறும்போது, இந்தியாவின் பிரதிநிதிகளாக, டாக்டர் ஏ. இலட்சுமணசாமி (முதலியார்) அவர்களும், டாக்டர் சி. பி. இராமசாமி (ஐயர்) அவர்களும் கலந்து கொள்வர் என்று தெரியவருகிறது.

2,10,000 ஆலைத் தொழிலாளருக்கு 'போனஸ்'

ஒப்பந்தம் ஏற்பட்டது

பம்பாய், ஜூலை 2—

பம்பாயைச் சேர்ந்த 2,10,000 ஆலைத் தொழிலாளர்களுக்கு இந்தத் திங்கள் இறுதியில் போனஸ் கிடைக்கும்.

போனஸ் தொகை எவ்வளவு என்பது சீக்கிரமே அறிவிக்கப்படும்.

இந்த முடிவு ஆலைத் தொழிலாளர்களின் சார்பில் ராஷ்டிரீய ஆலைத் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுக்கும்—ஆலை முதலாளிகள் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின்போது மேற்கொள்ளப்பட்டது என்றெல்லாம் தெரியவருகிறது.

15 நாளையச் சம்பளமாவது குறைந்தபட்ச போனசாகத் தரப்படவேண்டும் என்று ராஷ்டிரீய ஆலைத் தொழிலாளர் சங்கம் ஏற்கனவே ஆலை முதலாளிகள் சங்கத்துடன் ஐர்தாண்டுகளுக்கான ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது என்றும் தெரியவருகிறது.

14,000 தொழிலாளர் வேலைநிறுத்தம்

230 பேர் கைது

பிக்கானீர், ஜூலை 2—

இங்கு, கடந்த ஜுன் 25-ந் தேதி முதல் சுமார் 14,000 ஜிப்சம் சுரங்க தொழிலாளர்கள் மாபெரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

நேற்று, விதிக்கப்பட்டிருந்த தடையுத்தரவைமீறி ஆர்ப்பாட்டம் செய்தார்கள் என்று குற்றம்சாட்டி, சுமார் 230 தொழிலாளர்களைப் போலீசார் கைது செய்து சிறைப் படுத்தியுள்ளார்களாம்.

1956-57-ல், மொத்தம் 75,000 அம்பர் சர்க்காக்கள், நூல் நூற்பவர்களுக்கு விநியோகம் செய்யப் படும்.

மணிமுத்தாறு அணை

ஒரு கண்ணோட்டம்

அம்பாசமுத்திரம், ஜுலை 3—

மணிமுத்தாறு கல் அணையில் 93 சத விகிதமும், மண் அணையில் 62 சதவிகிதமும் இதுவரையில் கட்டப்பட்டுள்ளது என்றும், அணைக்கட்டு வேலை 1957 ஏப்ரலில் முடிவடையும் என்று எதிர்பார்ப்பதாகவும் அணையைப் பார்வையிடச் சென்றிருந்த மத்திய செய்தி—ஒலிபரப்பு அமைச்சர் டாக்டர் பி. வி. கேஸ்கரிடம் அணையின் பிரதம எஞ்சினியர் கூறியுள்ளார்.

அணையின் மொத்த நீளம் 982 அடி; இதில் கல்அணை 1,230 அடிகளாகும். நீர்த் தேக்கத்தில் 5,511-மில்லியன் கன அடி தண்ணீர் தேங்கி நிற்கும்.

இந்தத் தண்ணீரினால், அம்பாசமுத்திரம், நாங்குனேரி, திருநெல்வேலி, திருச்செந்தூர் தாலுகாக்களில் 20,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

'படுகொலை'-சுவரொட்டிகள் கிழிக்கப்பட்டன

காமராசர் சீடர்களின் சேட்டை

1—7—56 மாலை வேலூர் அடுத்த கொணவட்டம் கிராமத்தில், முதன் மந்திரி காமராசர் அவர்கள் ஏற்கனவே பழக்கத்தில் உள்ள ஒரு பாலத்தைத் திறக்க வருவதாக இருந்தது.

கொணவட்டம் தி. மு. கழகத்தினர், தலைமைக் கழகம் அனுப்பிய 'இலங்கை தமிழர்கள் கொலை' என்ற சுவரொட்டிகளை ஏற்கனவே அங்கு ஒட்டியிருந்தனர். அந்தச் சுவரொட்டிகளை, தாலூகா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஜீவரத்தினம் என்பார் கிழித்துக் கொண்டிருந்தாராம்; கழகத் தோழர்கள் அதுபற்றிக் கேட்டபோது, 'இலங்கைத் தமிழர்கள் கொலை செய்யப்பட்டால் அதற்குக் காமராசர் என்ன செய்ய முடியும்' என்று பேசியதோடு, மேலும் கிழிக்க முயற்சித்தாராம்.

உடனே தோழர்கள், கிழிப்பவரை அணுகி, 'நீங்கள் இப்படிக் கிழித்தால், மாலை, காமராசர் முன்னால் மறியல் செய்வோம்' என்று கூறிய பிறகு போய் விட்டாராம்!

அவர்களால் முழுதும் கிழிக்க முடியாத நிலையில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருக்கிறது. இங்கே வருகை தரும் காமராசர் கண்களில் அந்தச் சுவரொட்டிகள் தென்படக்கூடாது என்று எண்ணியவர்கள் எண்ணம் வீணாகி விட்டது என்பதை, கிழித்தும் கிழியாமல் இருக்கும் பாதி சுவரொட்டிகள் சொல்லிக் கொண்டு இருக்கின்றன.

(ச. கி.)

நீதிமன்ற விசாரணைக்கு காங்கிரசார் அஞ்சுகின்றனர்?

நேர்மையற்ற கட்சிபூர்வ விசாரணையை நாடுகின்றனர்!

ஆசாத் மேற்கொண்ட நடவடிக்கைக்குத் தரப்படும் விளக்கம்!

புதுடில்லி, ஜூலை 2—

ஓஷியார்பூர் சம்பவங்கள் குறித்து காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஸ்ரீமன்நாராயணன், தான் ஒரு விசாரணை நடத்தப்போவதாக அறிவித்த 24 மணி நேரத்திற்குள்ளாக, மௌலானா ஆசாத், 'விசாரணை இப்போது நடைபெறாது' என்று, அறிக்கை விடுத்திருக்கிறார்.

விசாரணை நடைபெறும் என்று அறிவித்தவுடன், மகா பஞ்சாப் சமிதியினர் தங்கள் கிளர்ச்சியைத் தீவிரப்படுத்தியிருப்பதாகவும், அதனால் விசாரணை நடைபெறுவதற்குரிய ஒரு சுமுகமான, அமைதியான சூழ்நிலை இல்லை என்றும், ஆசாத், விசாரணை நிறுத்தப்பட்டதற்கான காரண விளக்கம் கூறியிருக்கிறார் என்று தெரியவருகிறது.

நீதி மன்ற விசாரணையை எதிர்நோக்க மறுக்கிற காங்கிரசார், கட்சியின் தவறுகளையும், குறைகளையும் மறைக்க கட்சிபூர்வமான விசாரணை என்ற நேர்மைக்குறைவான வழியை நாடுகிறார்கள் என்று கருதப்படுவதால், ஆசாத் மேற்கொண்ட

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 3—7—'56 செவ்வாய்

இலங்கைத் தமிழர் அவதி

தமிழ் மொழி, தமிழ் கலாச்சாரம் காப்பாற்றப்பட தமிழ்ப் பகுதிகளடங்கிய ஒரு சுதந்திரத் தமிழ் நாடு அமைப்பது— இலங்கையில் ஒரு பெடரல் யூனியன் சர்க்கார் அமைப்பது என்பதை இலட்சியமாகக் கொள்வதைத் தவிர, இலங்கைத் தமிழருக்கு வேறு வழியில்லை— என்று, பெடரல் கட்சியினர் தெரிவித்திருக்கின்றனர்.

இந்த இலட்சியத்திற்காகப் போராடவும், தமிழர் இனம் ஒரு தனிப் பண்பாடு கொண்ட தேசிய இனம் என்ற நிலையிலிருந்து அழிந்துவிடாமல் காப்பாற்றிப் பாதுகாக்கவும் தேசிய விடுதலை இயக்கம் ஒன்றைக் காண்பதற்கான வழிவகைகளையும் அவர்கள் சிந்தித்து வருவதாகத் தெரியவருகிறது.

பெடரல் கட்சியினர் வெளியிட்டுள்ள இந்தக் கருத்து, இலங்கைத் தமிழர்கள் அனைவரையும் ஒரு அணியில் கொண்டுவந்து நிறுத்த எத்தனை தூரம் பயன்படப்போகிறது என்பதை இப்போது கூற இயலாது.

ஆனால், இலங்கை மக்கள் சபையில், தமிழர்களுக்கான தனிப்பெரும் கட்சியாக உள்ள பெடரல் கட்சியினர் இப்படி ஒரு கருத்தை அறிவித்திருப்பதும், அந்தக் கருத்து நாளுக்கு நாள் ஆதரவைப் பெற்று வருவதும் எதனால் என்று சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர், இலங்கை ஆட்சியாளர்.

சிங்களத்தை தமிழ் மக்கள் மீது திணிப்பதில் கொத்தலாவலை காட்டிய 'மதில் மேல் பூனை' மனப்போக்கு, தீவிர சிங்களவாதியாக விளங்கிய பண்டார நாயகாவிற்கு வெற்றியைத் தேடித் தந்தது.

வெற்றி பெற்றதும், சிங்களவரில், மொழி, இன வெறி கொண்டுவிட்ட தீயசக்திகளின் பேராசைக்கு — அந்தச் சக்திகளின் நிர்ப்பந்தத்தினுலோ என்னவோ, இணங்கி, தனிச் சிங்கள மசோதாவை அவசர அவசரமாக பண்டார நாயகா கொண்டுவந்ததும், அதை எதிர்த்து தமிழர் பிரதிநிதிகள் அமைதியான அறப்போரில் ஈடுபட்டதும், பண்டாரநாயகாவின் தீவிர சிங்கள மனப்போக்கால் தூண்டப்பட்ட தனிச் சிங்கள வெறியர்கள் அந்த அறப்போர் வீரர்களைத் தாக்கியும், தமிழர் கடைகளைச் சூறையாடியும், தமிழ்ப் பெண்களை அவமானப்படுத்தியும் வெறியாட்டம் ஆடியதும் வாசகர்களின் நினைவிலிருந்து சுலபத்தில் அகற்றக்கூடியன அல்ல.

சிறுபான்மையினரான தமிழர் பெருமக்கள், சிங்கள மக்களோடு ஒன்றி வாழ்வதால், தங்கள் உரிமைகளுக்கும் வாழ்விற்கும் பாதுகாப்புத் தேடிக் கொள்வது எளிதன்று என்ற நிலையை பட்டவர்த்தனமாகத் தெரிவிப்பதாகவே இந்தச் சம்பவங்கள் அமைந்துள்ளன என்று இலங்கைத் தமிழர் பிரதிநிதிகள் கூறுகின்றனர்.

தமிழர்கள் தனித்து வாழ்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்கு அவர்கள் தூரத்தப்பட்டுவிட்டனர் என்று பெடரல் கட்சி கூறுகிறது.

தமிழர்கள், தனித்து சுதந்திரமாக, இலங்கையில் ஒரு 'பெடரல் யூனியன்' சர்க்கார் அமைத்துக்கொண்டு வாழ்வதே வழி என்று பகர்கின்றனர்.

இது சரியா, தேவைதானு என்பதை விவாதிப்பதல்ல, நமது நோக்கம்.

ஒரு சர்க்கார், சிறுபான்மையினருக்கு—நாட்டில் உள்ள மொத்த மக்கள் தொகையில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கினரான சிறுபான்மையினருக்கு மொழித் துறையில் இழைக்கும் அநீதியின் விளைவு எத்தன்மையதாய் இருக்கும் என்பதற்கு இலங்கை நிலை ஒரு நல்ல எடுத்துக்காட்டு!

'எங்கள் மொழி, பண்பாடு, வாழ்வு இவை காப்பாற்றப்பட தனிச் சுதந்திரத் தமிழ் நாடு வேண்டும்' என்று கருதுகிற நிலைக்கு இலங்கைத் தமிழரைத் துரத்தியவை, பண்டாரநாயகாவின் தனிச் சிங்களமொழிக் கொள்கையும், அதன் அடிப்படையில் சிங்களவரில் ஒரு சாராரிடை வளர்ந்தோங்கி நிற்கும் மொழி, இனவெறியும் தானே!

பண்டாரநாயகா, பண்பட்ட ஒரு இடதுசாரி; நேருவின் நண்பர்; முற்போக்கான வெளிநாட்டுக் கொள்கையுடையவர்; கூடி வாழ்தல்—சக ஜீவனம் என்ற சமாதானத் தத்துவத்தை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டிருப்பவர் என்றெல்லாம் வருணிக்கப்படுகிறது; ஆனுல், உள்நாட்டில், சிங்கள மொழி பேசும் மக்களுக்கு இருக்கும் உரிமைகள் தமிழ் பேசும் மக்களுக்கு இருக்கக் கூடாது என்று கூறுபவராக இருக்கிருர், அவர். உள்நாட்டில், 'வாழு, வாழவிடு' என்ற கொள்கையை அமுல் செய்ய விரும்பாத பண்டார நாயகா, வெளிநாட்டுக் கொள்கையில் முற்போக்கானவர் என்று கூறப்படுமானுல், அது முதல் தரமான பித்தலாட்ட அரசியல் வாதமாகும்.

தமிழ் மொழிக்கும், சிங்களத்தைப் போலவே சமநிலை வழங்க மறுக்கும்வரை—பண்டார நாயகா தனது பிற்போக்கான வெறிகொண்ட ஒரு மொழிக் கொள்கையை கடைப்பிடிக்கும்வரை, இலங்கைத் தமிழர்கள் மட்டுமின்றி, உலகில் நியாயம் உணர்ந்தோர் எவருமே, பண்டாரநாயகாவை கடைந்தெடுத்த பிற்போக்குவாதி—பாசிச வெறிகொண்டவர் என்றே மதிப்பிடுவர் என்பதில் மட்டும் ஐயமில்லை.

பெனிசிலின் இறக்குமதி குறைக்கப்படுமாம்

புதுடில்லி, ஜுலை 1—

பெனிசிலின் இறக்குமதியைக் கடுமையாகக் குறைப்பதற்கு இந்திய சர்க்கார் உத்தேசித்துள்ளதாகத் தெரிகிறது.

பெனிசிலின் உற்பத்தி, உள்நாட்டில் பெரும் அளவுக்கு அதிகரித்துள்ளதே இறக்குமதிக் குறைப்புக்குக் காரணமாம்.

150 ஏக்கர்: நில உடைமைக்கு வரம்பு

சொந்த சாகுபடிக்கு அதிகபட்ச நிலம் 450 ஏக்கர்

ஆந்திர சர்க்கார் நிலச் சீர்திருத்தக் குழு சிபாரிசு

கர்நூல், ஜுன் 30—

ரூ 250 தீர்வையுள்ளது அல்லது 150 ஏக்கர் ஆகிய இவை இரண்டில் எதுகுறைவோ அது நிலவுடைமைக்கு வரம்பாகயிருக்கலாம் என ஆந்திர அரசியலாரின் நிலச்சீர்திருத்தக் குழு சிபாரிசு செய்துள்ளதென்று தெரிய வருகிறது.

ரூ 3,000 வருமானம் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் நிலவுடைமை வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது; முதல் தரமான நஞ்செய் 25 ஏக்கர் இந்த வருவாயைத் தரக்கூடியது என்று கருதப்படுகிறது.

இந்த வரம்புக்கு மேல் புதிதாக நிலம் சேர்க்கக் கூடாதாம்.

சொந்த சாகுபடிக்கு வைத்துக் கொள்ளக் கூடிய அதிகபட்ச நிலம் ரூபாய் 750. தீர்வை அல்லது 450 ஏக்கர் ஆகிய இரண்டில் எது குறைவோ அதுவாக இருக்கலாமென்றும், அதற்கு மேலுள்ளதை இரண்டாண்டுகளுக்குள் குத்தகை அல்லது வார சாகுபடிக்கு விடவேண்டுமென்றும்; சாகுபடி செய்வோர் வைத்திருக்கக்கூடிய அதிகபட்ச நிலம் 60 ஏக்கா அல்லது ரூ 100 தீர்வையுள்ளதாயிருக்கலாமென்றும், அதிகபட்ச வரம்புக்கு மேல் நிலச் சொத்துக்களை அறநிலையங்களும் விலை கொடுத்து வாங்கக் கூடாதென்றும், ஆனுல், தானமாக எவ்வளவு வேண்டினும் பெறலாம் என்றும் தெரியவருகிறது.

வாரம் அல்லது குத்தகைக்கு சாகுபடி முறை ரத்து செய்யப்படலாகாது என சிபாரிசு செய்யப்பட்டுள்ளதாம்.

ரூ. 300 தீர்வை அல்லது 180 ஏக்கருக்கும் அதிகமாக உள்ள நிலங்களை சாகுபடி செய்கிறவர்கள் அவற்றைப் பத்தாண்டு தவணைகளில் நியாய விலை கொடுத்து நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து வாங்குவதற்கு வசதி செய்து தரப்படுமாம்.

பர்மாவிடம் அமெரிக்கா அரிசி வாங்குகிறது

காரணம் என்ன?

ரங்கூன், ஜுலை 1—

பர்மாவிலிருந்து 11 இலட்சம் டன் அரிசி வாங்குவதற்கு அமெரிக்கா சர்க்கார் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது; இதன் விலையை டாலர்களாகவே அமெரிக்க சர்க்கார் தரக்கூடும்.

பர்மாவில், சேவைக்காக அமர்த்தப்படும் அமெரிக்க நுட்ப நிபுணர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்கும பயிற்சிக்காக அமெரிக்காவுக்கு அனுப்பப்படும் பர்மிய மாணவர்களின செலவுக்காகவும் அமெரிக்க டாலர்கள் பயன்படுமாம்.

பள்ளிச் சிறுவர்களுக்கு இலவச உணவு

மத்திய சர்க்கார் தாராளம்

புதுடில்லி, ஜுலை 1—

திட்டக்குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், மத்திய சர்க்கார், பள்ளிச் சிறுவர்களின் மருத்துவப் பரிசோதனைக்கு சுமார் ரூ. 164 இலட்சமும், இலவச உணவுக்கு ரூ. $55\frac{1}{2}$ இலட்சமும் அனுமதித்திருக்கிறதாம்.

உண்மையாகவா?

நாளொன்றுக்கு 1,000 டன் சர்க்கரை தயாரிக்கக் கூடியதும், ரூ. 65 இலட்சம் பெறுமானமுள்ளதுமான சர்க்கரை ஆலை இயந்திரத்தை, ஒரு பிரிட்டிஷ் நிறுவனம் சென்னைக்கு விநியோகிக்கும் என்று, ஒரு பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

அதிகாரங்கள் மத்திய சர்க்காரிடம் குவிக்கப்பட்டதின் கொடிய விளைவு

'தவறுகள் நிகழ்ந்தன; எதேச்சாதிகாரம் வளர்ந்தது'

'அதிகாரங்களைப் பரவலாக்க வேண்டுவது அவசியமே'

சீனப் பிரதமர் சௌ-என்-லாய் ஒப்பம்

பிகிங், ஜுன் 30—

நிர்வாகத்தில் பல புதிய மாற்றங்களைப் புகுத்த செஞ்சீன சர்க்கார் திட்டமிட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

அதிகாரம் முழுவதையும் ஓரிடத்தில் குவித்து வைப்பதின் மூலம், சர்க்கார் தவறுகள் இழைக்க நேர்ந்து விட்டதாகவும், எனவே, இப்போது அதிகாரத்தைப் பரவலாக்க முற்பட்டிருப்பதாகவும், பிரதமர் சௌ—என்—லாய் தெரிவித்திருக்கிருர்.

அதிகாரம் முழுவதும் மத்திய சர்க்காரிடம் குவிக்கப்பட்டதினுல் தவறுகள், எதேச்சாதிகாரமான போக்கு வளர்ந்தது உண்மைதான் என்று ஒப்புக்கொண்ட அவர், நிர்வாக அதிகாரம் பரவலாக்கப்படும் என்றும் சீன மக்கள் தேசிய காங்கிரசில் அறிவித்திருக்கிருர்.

அதிகாரத்தைப் பரவலாக்கும் திட்டம் இந்த ஆண்டு இறுதிக்குள் தயாராகிவிடும் என்றும், அது உடனடியாக அமுல் செய்யப்படும் என்றும் சீனப் பிரதமர் தெரிவித்திருக்கிருர்.

மத்திய சர்க்கார், மாநில சர்க்கார், ஸ்தல ஸ்தாபனங்கள் இவற்றிடையே அதிகாரப் பிரிவினைக்கான அடிப்படை, இப்போது, சோஷலிச வெற்றிக்குப் பிறகு தெளிவாகி வருவதாகவும் அவர் கூறியிருக்கிருர்.

முக்கியமான தொழிலாக விவசாயம்!

பம்பாய், ஜுலை 1—

"உற்பத்தி செய்வோருக்கு உத்தரவாதமான ஒரு விலை கிடைத்தால்தான் அவர்கள் மேற்கொண்டு உற்பத்தி செய்வதற்கு ஊக்கம் ஏற்படும். கைத்தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருட்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு தாராளமான கடன் வசதிகள் கிடைக்கவேண்டும். இன்னும் 20, 30 ஆண்டுகளுக்கு விவசாயம் தான் மிக முக்கியமான தொழிலாயிருக்கும்," என்று மத்திய சர்க்கார் கனத் தொழில் இலாகா அமைச்சா எம். எம். ஷா கூறியுள்ளார்.

வாய்ப்பந்தல் சிறப்பாகத்தான் இருக்கிறது!

கோழிக்கோடு, ஜுன் 30—

"தொழில் தகராறுகளைத் தீர்க்கப் பழைய முறைகள் இனிப் பயன்படாது; தொழில் உறவு விஷயத்தில் அரசினா முற்றிலும் புதிய முறையை மேற்கொள்கின்றனர்; தொழிலாளரின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதே சர்க்காரின் கொள்கை," என்று, இந்திய சர்க்கார் தொழிலாளர் இலாகா அமைச்சர் கந்துபாய் தேசாய் கூறியுள்ளார்.

"தொழில் தகராறுகள் இயன்ற வரையில் சமரசமாகத் தீர்க்கப்படுவது நல்லது. இறுதியாகத்தான் தகராறுகள் மத்தியஸ்தத்திற்கு விடப்பட வேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் மத்தியஸ்தத்திற்கு இணங்காவிடில்தான் அரசியலார் தலையிடுவார்கள்" என்றும் தேசாய் தெரிவித்திருக்கிருர்.

போலந்து மக்களுக்கு இலவச உணவு

வாஷிங்டன், ஜுன் 30—

போலந்து நாட்டில்—குறிப்பாக போஜ்நாம் நகரில், கடந்த சில நாட்களாக நடைபெறும் கலவர நிகழ்ச்சிகள், பட்டினியின் எதிரொலியாகஇருப்பதால், கோதுமை மாவு முதலிய உணவுப் பொருள்களை இலவசமாக வழங்க அமெரிக்க சர்க்கார் தயாராகவிருப்பதாக, செஞ்சிலுவைச் சங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

3,300 கோடி டாலர் செலவில் நெடுஞ்சாலை!

41,000 மைல் நீளத்திற்கு அமெரிக்கா உருவாக்கும்

தற்காப்புத் துறை அல்லாத நிலையில், அமெரிக்க சரித்திரத்திலேயே மிகப்பெரிய திட்டமான சாலை அமைப்புத் திட்டத்துக்கு 3 300 கோடி டாலர் தேவைப்படுவதும், காங்கிரசின் ஒப்புதல் பெற்றதுமான சட்டத்தில் அமெரிக்கத் தலைவர் ஐசனேவர் உடனடியாகக் கையெழுத்திடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது

நாடு முழுவதும் 41,000 மைல் நீளத்துக்கு உயர்ந்த நெடுஞ்சாலைகள் அமைப்பதற்கு இச்சட்டத்தின் முக்கியப் பகுதி வகைசெய்கிறது; செலவில் 90 சதவிகிதத்தை பெடரல் அரசாங்கமும், மீதியை மாநில அரசாங்கங்களும் கொடுக்கும்.

பதின்மூன்று ஆண்டுகளில் பூர்த்தியாகும் இப்பெரிய திட்டம் 42 மாநிலத் தலைநகரங்களையும் 50,000-மும் அதற்கு அதிகமும் மக்கள் தொகையுடைய அமெரிக்க நகரங்களில் 90 சதவிகிதத்தையும் இணைக்கும் நான்கு முதல் எட்டு வரை பாதைகள் அமைந்த அகன்ற பெருஞ்சாலைகளை உருவாக்கும்.

விசைத் தறிகளைப் புகுத்துவதற்கு எதிர்ப்பு

ஆந்திர கைத்தறி நெசவாளர் சங்க செயலாளர்கள் விளக்கம்

'விசைத் தறிகளைப் புகுத்துவதால், இலட்சக்கணக்கான கைத்தறி நெசவாளர்கள் வேலையின்றித் திண்டாட நேரிடும்; அதனுல் ஏற்படும் கடுமையான சிக்கல்களை அரசாங்கம் தீர்க்க வேண்டும்.

"வேலையின்றிக்கிடக்கும் 11 லட்சம் தறிகள், ஓராண்டில் 300 நாட்கள் வேலை செய்ய முற்பட்டால், இப்பொழுது உற்பத்தியாகும் 150 கோடி கெசம் துணிக்குப் பதிலாக, 470 கோடி துணியை உற்பத்தி செய்யலாம்; ஆலைகள், விசைத் தறிகள் ஆகியவற்றில் உற்பத்தி செய்யப்படும் 520 கோடி கெசங்களுடன் சேர்த்தால், 170 கோடி கெசம் கூடுதலான உற்பத்தி ஆகும்,"

இவ்வாறு, ஆந்திர மாகாண கைத்தறி நெசவாளர் காங்கிரசுச் செயலாளர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுவிட்டு, மேலும் தெரிவித்துள்ளதாவது :—

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நாட்டிற்குத் தேவைப்படும் கூடுதலான துணியை இன்றையக் கைத்தறிகள் மூலம் உற்பத்தி செய்ய முடியும்; அப்படியிருக்கையில் விசைத்தறிகளை அரசாங்கம் புகுத்த வேண்டிய காரணம் தெரியவில்லை."

மைசூர் காங்கிரசிலும் 'கோஷ்டி'ச் சண்டை

அனுமந்தையாவை வெளியேற்ற முஸ்தீபு

நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவர நடவடிக்கை

பெங்களூர், ஜூலை 1—
மைசூர் முதன் மந்திரி அனுமந்தையாவை பதவியிலிருந்து துரத்துவதற்குத் திட்டமிடப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது

அவர் மீது ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர உறுப்பினர்களிடை கையெழுத்து வாங்கப்படுவதாகத் தெரியவருகிறது.

80 காங்கிரஸ் உறுப்பினர்களில் 56 பேர் அனுமந்தையா மீது நம்பிக்கை இல்லை என்று தெரிவித்திருக்கின்றனராம்

டில்லி காங்கிரஸ் மேலிடத்திடம் இது பற்றி அனுமதி கேட்கப்பட்டிருப்பதாயும், மேலிடம் இன்னும் முடிவு கூறவில்லை என்றும் தெரியவருகிறது.

எல்லா கன்னட மக்களையும் உள்ளடக்கிய ஒரு ஐக்கிய கர்நாடக மாநிலம் அமைப்பதற்கு அனுமந்தையா ஒப்புக்கொண்டதற்கு எதிராகவே இந்த முயற்சியாம்.

காங்கிரசாரில் பலர் இது போன்ற ஒரே மைசூர் மாநிலம் அமைப்பதை விரும்பவில்லை என்றும், சில மந்திரிகள்கூட இந்த ஒரு மாநில அமைப்பை எதிர்க்கிறார்கள் என்றும் ஏற்கனவே செய்திகள் வந்திருக்கின்றன

இன்னும் ஒரு வாரத்தில், மைசூர் காங்கிரசில் தோன்றியுள்ள இந்தப் பிளவு உச்ச கட்டத்தை அடையும் என்றும், அப்போது அனுமந்தையாவின் நிலை, இறுதியாக அறிவிக்கப்பட்டுவிடும் என்றும் கூறப்படுகிறது.

வல்லரசுகளின் அணுகுண்டு

சோதனைகளின் விளைவு

ஜப்பான் மக்கள் தலையில் 'விடி'கிறது

டோக்கியோ, ஜுன் 29—
மேற்கே ரஷ்யாவும், தெற்கே பிரிட்டனும், அமெரிக்காவும் நடத்திவரும் அணு, நீர்வளிக் குண்டுச் சோதனைகளின் விளைவாக ஜப்பான் மீது கதிரியக்கப் பலம் கிரந்தரமாகிவிடக்கூடிய அபாயம் இருப்பதாகவும் அபாய எல்லையை இன்னும் அடையவில்லையாயினும் அது விரைவில் வந்துவிடலாம் என்றும் அணுசக்தி நிபுணர் காவபாடா தெரிவித்திருக்கிறார்.

இந்தியாவில் ஆண்டுதோறும் சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள விளையாட்டு (ஸ்போர்ட்ஸ்) சாமான்கள், சிறு தொழில் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன

இஸ்ரேல் — அராபியச் சண்டை

உலக யுத்தமாக உருவெடுக்கக்கூடும்

குருஷ்சேவ் கருத்து

கெய்ரோ, ஜூலை 1—
"இஸ்ரேலுக்கும்—அராபிய நாடுகளுக்கும் சண்டை மூண்டால், அது மூன்றும் உலக யுத்தமாக உருவெடுக்கும்,"
என்று ரஷ்யக் கம்யூனிஸ்டு தலைவர் குருஷ்சேவ் கூறியுள்ளாராம்
"இப்போது, காலம், அராபிய நாடுகளுக்குச் சாதகமானதாகவே இருக்கிறது. இந்த இடைக்காலத்தில் அவை, தங்கள் வலுவைக் காட்டிக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. ஒற்றுமையைப் பலப்படுத்திக்கொண்டு, அவை பொறுமையாயிருக்கக்கூடும். அராபிய நாடுகள், தங்கள் புத்திசாலித்தனத்தை உலகறியச் செய்வதில் வெற்றி பெற்றிருக்கின்றன. இனி அவை, மத்தியக் கிழக்கு நாடுகளில் அமைதி காக்க முயற்சிக்கவேண்டும்," என்றும் குருஷ்சேவ் கூறியிருக்கிறார்.

எகிப்திய செய்தித் தாள் ஒன்றின் நிருபருடன் பேசும்போது தான் அவர் இந்த தகவலைத் தந்தாராம்.

"இஸ்ரேல், ஒரு உறுதியற்ற சூழ்நிலையை நிலைக்கச் செய்வதின் மூலம் இலாபம் பெறுவதாக நினைத்துச் செயல்படுவதாகத் தெரிகிறது; அதனால் தான் போலும், அராபிய எல்லைகளைத் தாக்கும்போது அது, ஐ. நா.-வின் முடிவுகள், போர் நிறுத்த ஒப்பந்தம் ஆகியவற்றைப் பற்றிக் கூட மதிக்க எண்ணுவதில்லை," என்றும் குருஷ்சேவ் கூறியதாக கூறப்படுகிறது.

சியாங் பிதற்றல்!

தைப்பே, ஜூலை 1—
அமைதியான முறையில் பார்மோசா விடுதலை பெறுவதற்கு வழி செய்யும் வகையில், தாம் தேசிய சீன சர்க்காருடன் பேச்சு நடத்துவதற்குத் தயாராக இருப்பதாக சீனப் பிரதமர் சூ-யென்-லாய் தெரிவித்ததற்கு, கீழ்க்கண்ட 5-நிபந்தனைகளின்பேரில சியாங் சர்க்கார் சமாதானப் பேச்சு நடத்தத் தயாராக இருக்கிறார்களாம்!

1. சீனாவிலிருந்து ரஷ்யர்கள் எல்லோரையும் வெளியேற்றவேண்டும்; 2. கூட்டு விவசாயப் பண்ணை முறையை ஒழித்து அதிலுள்ள நிலங்களை அவற்றின் முன்னாள் உரிமையாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும்; 3. பறிமுதல் செய்யப்பட்ட இயந்திரத் தொழிற்சாலைகளையும், வர்த்தக நிறுவனங்களையும், சொத்துக்களையும் அவற்றின் சொந்தக்காரர்களிடமே ஒப்படைக்கவேண்டும்; 4. சிறைமுகாம்களை இல்லாமற் செய்யவேண்டும்; 5. சீனாவில் இப்பொழுதுள்ள 'பினுமி' (கம்யூனிஸ்டு) சர்க்காரைக் கலைத்து விடுவதுடன், அதை நிராகரித்துவிட்டு சீனக் குடியரசு சர்க்காருக்கு (சியாங் அரசியலாருக்கு) விசுவாசம் காட்டவேண்டும்.

தொழிலாளி ஒருவருக்கு ரூ. 100 பரிசு!

70 வயதான செருப்புத் தைக்கும் தொழிலாளி ஒருவர், குடியரசுத் தலைவருக்கு 3 தோலாக்கள் மட்டுமே எடையுள்ள ஒரு ஜோடி அழகிய செருப்புக் கொண்டுவந்து தந்தார் என்றும், மிகச் சிறந்த தோல்கொண்டு தயாரிக்கப்பட்டிருந்த அந்த மிதியடிகளைக் கண்டு ஆச்சரியப்பட்டவராய், குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத் ரூ. 100 கொடுத்து அந்த மிதியடிகளை வாங்கிக்கொண்டதாகவும் தெரியவருகிறது.

இந்தியாவில், 1955-ல் சுமார் ரூ. 8,50,00,000 மதிப்புள்ள மின்சார 'டிரான்ஸ்பார்மர்'கள் தயாரிக்கப்பட்டன.

உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பதை ஒட்டி இறக்குமதிக்குக் கட்டுப்பாடு

இந்திய சர்க்கார் தரும் விளக்கம்

புதுடில்லி, ஜூன் 30—
நாட்டில் போதுமான அளவுக்கு உற்பத்தியாகும் அல்லது உற்பத்தி செய்யக்கூடிய பலரகமான சாமான்களின் இறக்குமதிக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

குடிசைத் தொழில்களுக்கான சிறிய கருவிகள், கார் கருவிகள், 'பால் பேரிங்கு'கள் ஆகியவற்றின் இறக்குமதிக்கு அதிக வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாண்டின் ஜூலை—டிசம்பர் காலத்திற்கான இறக்குமதிக் கொள்கையில், இயந்திரங்களின் உறுப்புக்கள், தொழில்களுக்கான மூலப்பொருட்கள் ஆகியவற்றின் இறக்குமதிகள் மேலும் தாராளமாக்கப்பட்டுள்ளன.

கைத்தறி நெசவாளர்களின் அதிகப்படியான நூல் தேவைகளைச் சமாளிப்பதற்காக 60-ம் நெம்பருக்கும், அதற்கும் மேற்பட்ட பருத்தி நூல் 'கோட்டா'க்கள் 65 சதவிகிதத்திலிருந்து 70 சதவிகிதத்திற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது குடைக் கம்பிகள் சிலவகைச் சாயங்கள் இறக்குமதிக் 'கோட்டா'வும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

75 சாமான்களின் இறக்குமதி கோட்டா'க்கள் குறைக்கப்பட்டுள்ளன; அவற்றில் முக்கியமானவை—கம்பளித் தயாரிப்புகள்; கண்ணாடித் தகடுகள், பித்தான்கள், சிலரக இரசாயனங்கள், செயற்கைப் பட்டு, உல்லன் துணிகள், மருத்துவ 'தர்மா மீட்டர்'கள், பால் பவுடர், இறுகிய பால்வெண்ணெய் ஆகியவைகளாகும்.

தாராள 'லைசென்ஸ்' பட்டியலிலிருந்து 31 வகையான பொருள்கள் நீக்கப்பட்டுள்ளன அந்த இனங்களில் செலவழிக்கப்படும் அந்நிய நாணயச் செலாவணிக்கு ஒரு வரம்பு கட்டுவதற்கே அப்படிச் செய்யப்பட்டது. உலர்ந்த பழங்கள், ஏலக்காய், சிறிய உடை வகைகள், கைக் கடிகாரங்கள் ஆகியவை இப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறது

இந்தத் தடையின் காரணமாக சுமார் ரூ. 5 கோடிக்கு அந்நியச் செலாவணி மிச்சமேற்படுமாம்.

'உரிமையை இழந்து உதவிபெற இயலாது'

பெல்கிரேடு, ஜூன் 30—
"நாட்டின் கௌரவத்திற்குக் களங்கம் ஏற்படும் தன்மையிலோ, அல்லது யூகோசுலேவியாவின் சுதந்திரமான வெளிநாட்டுக் கொள்கையை விட்டுக் கொடுத்தோ நாம் அமெரிக்க உதவியைப் பெற எப்பொழுதுமே விரும்பியதில்லை; இனியும் அதுபோல விரும்பமாட்டோம்"
என்று, மார்ஷல் டிட்டோ குறிப்பிட்டுள்ளார்.

ஆவடியில் உரத் தொழிற்சாலை

பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்று ஏற்படுத்துகிறதாம்

சென்னை, ஜூலை 1—
'சூப்பர் பாஸ்பேட்' எனும் இரசாயன எருவைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று, ஆவடியில் நிறுவப்பட உள்ளதாம்.

சென்னையிலுள்ள பிரிட்டிஷ் நிறுவனமொன்றின் முயற்சியால் ஏற்படுத்தப்படும் இத்தொழிற்சாலையில், ஆண்டிற்கு சுமார் 33,000 டன் எரு உற்பத்தி செய்யப்பட முடியுமென்றும் தென்னாட்டின் இரசாயன எரு தேவையைப் பெரும் அளவில் அது பூர்த்தி செய்ய முடியுமென்றும், இவ்வாண்டு டிசம்பரிலேயே அது வேலை செய்யத் துவங்கிவிடலாமெனவும் கூறப்பட்டுள்ளது.

இந்தக் கம்பெனியின் நிர்வாகியான சந்திரதாஸ் என்பார் 'பாஸ்பேட்' உர உற்பத்தி முறைகளைக் கற்றுவர இங்கிலாந்து சென்றுள்ளார் என்றும் தெரியவருகிறது.

திருமணங்கள்

17-6-56 காலை 10 மணிக்கு, நரசிங்கபுரத்தில், திரு எஸ். அருணாசலம் தலைமையில் தோழர் கே. வெங்கடாசலம் — தோழியர் சி... மணி திருமணம் நடைபெற்றது. தோழர்கள் வாழ்த்துரை வழங்கினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

17-6-56 காலை 10 மணிக்கு, நரசிங்கபுரத்தில் என். எம். மாணிக்கம் தலைமையில், தோழர் எ. பெருமாள்—தோழியர் கங்கையம்மாள் திருமணம் நடைபெற்றது. தோழர்கள் பலர்வாழ்த்துரை வழங்கினர்; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

17-6-56 காலை 7 மணிக்கு, நரசிங்கபுரத்தில், ஊராட்சி மன்றத் தலைவர் திரு வே. அருணாசல (படையாச்சி) தலைமையில், தோழர் பெரியசாமி—தோழியர் கருப்பாயி திருமணம் நடைபெற்றது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

24—6—56 காலை 8 மணியளவில், புதவை இஞ்ஞாஸ் மேஸ்திரி வீதி, 27-ம் எண் இல்லத்தில் தோழர் அ. பாலசுப்பிரமணியன்—தோழியர் இந்திராணி திருமணம் தோழர் பாரதிதாசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ம. நோயேல், ச. சிவப்பிரகாசம், கு. முருகையன் சு. பெருமாள் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாக அளிக்கப்பட்டது.

(அன்பளிப்பாகத் தரப்பட்டுள்ள தொகைகள் யாவும் வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.)

சிறிய துறைமுகங்கள் அபிவிருத்திக்கு முயற்சி

தென்னாட்டுத் துறைமுகங்களும் சேர்த்துக்கொள்ளப்படும்

புதுடில்லி. ஜுன் 30—
இந்திய அரசியலார், சிறிய துறைமுக முன்னேற்றதிட்டத்தை மாநில சர்க்கார்களையும், திட்டக் குழுவையும் கலந்துகொண்டு தயார் செய்துள்ளனரென்றும், இது 2-வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் நிறைவேற்றப்படுமென்றும் தெரிகிறது.

இந்திய சர்க்கார் சிறிய துறைமுக முன்னேற்றத்திற்கு ரூ. 5 கோடி செலவிடுமாம்; இவற்றில் ரூ. 3 கோடி மாநில சர்க்கார்களுக்குக் கடனாகத் தரப்படுமாம்.

இத்திட்டத்தில் சென்னை மாநிலத்திலுள்ள தூத்துக்குடி, நாகப்பட்டினம், கடலூர் ஆகிய துறைமுகங்கள் சேர்த்துக்கொள்ளப்படுமெனத் தெரியவருகிறது.

சென்னை அஞ்சல் பிரிப்பக ஊழியரின் சம்பள மறுப்புக் கிளர்ச்சி

தோழர்கள் விளக்கவுரை

சென்னை அஞ்சல் பிரிப்பகத்தில் 30—6—56 பிற்பகல் 3-மணிக்கு தோழர் ம. ம. இராமலிங்கம் தலைமையில் ஓர் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ஜி. இலட்சுமணன் தபால் சிப்பந்திகள் மாவட்ட இணைப்புக் குழுச் செயலாளர்) முகவை ஆர். எஸ். பாண்டியன் கலந்து கொண்டனர்.

2—7—56-ல் நடைபெறப் போகும் கிளர்ச்சி, சர்க்காரின் நியாயமற்ற போக்குக்கு வருத்தம் தெரிவிக்கவும், இந்தியாவிலுள்ள — குறிப்பாக வடநாட்டிலுள்ள முக்கிய நகரங்களாகிய டில்லி பம்பாய், கல்கத்தா, நாகபுரி போன்ற இடங்களில் வழங்கி வரும் போக்குவரத்துச் சலுகையை சென்னைக்கு மட்டும் நிராகரித்திருப்பது சென்னைக்குச் செய்யும் பெரும் துரோகம் என்று எடுத்துக்காட்டவும், சென்னை மாநில அதிகாரி 'போஸ்ட் மாஸ்டர்-ஜெனரலை'க் கலக்காமல் டில்லி மேலிடம் எதேச்சாதிகாரமாக நடந்துகொண்டதை வன்மையாகக் கண்டிக்கவும், உடனே அரசாங்கம் போக்குவரத்துச் சலுகையை வழக்கம்போல் தந்து, வளர்ந்துவரும் மனக்கசப்பை மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொண்டும் ஆர். எம் எஸ் ஊழியர்களின் இக்கோரிக்கைக்கு தபால் ஊழியர்கள் எல்லோருடைய ஆதரவும் உண்டு என்றும் தோழர் ஜி இலட்சுமணன் தமது பேச்சில் குறிப்பிட்டார்.

அடுத்து தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் பேசுகையில், இத்தகைய கிளர்ச்சிகள் அரசாங்கத்தின் ஊழலைப் பற்றி மக்கள் நன்கு அறிந்துகொள்ள உதவுமென்றும், சர்க்கார் ஏற்கனவே வழங்கிவந்த சிறிய சலுகைகளைக் காரணம் காட்டாமல் நிறுத்திவிடுவது அரசாங்க ஊழியர்களின் மனதைப் புண்படுத்தியது அநியாயமென்றும், இத்தகைய குமுறலை ஏற்படுத்தாது சர்க்கார் நல்ல போக்கை மேற்கொண்டு உடனே ஆவன செய்யவேண்டும் என்றும் தெரிவித்துக் கொண்டார்.

தோழர் ஆர். முனிரத்தினம் (மாவட்டச் செயலாளர், ஆர். எம். எஸ். யூனியன் நான்காவது வகுப்பு) பேசுகையில், தாம் இப்போராட்டத்தை முழுமனதோடு ஆதரிப்பதாகத் தெரிவித்தார்

தோழர் வச்சிரவேலு நன்றி கூறினார்.

1—7—56 காலை $10\frac{1}{2}$ மணிக்கு, நடைபெற்ற கூட்டத்தில் தோழர் ஏ. எஸ். ராசன் (பொதுச் செயலாளர், அனைத்திந்திய தபால் ஊழியர்களின் சங்கம்—மூன்றாவது வகுப்பு) கலந்துகொண்டு கூட்டத்தை சிறப்பித்தார்.

தோழர்கள் பி. எச். வி. எஸ். பாண்டியன், ஆர். முனிரத்தினம் ஆகியோர் தங்களுடைய முழு ஆதரவும் ஒத்துழைப்பும் இந்த நியாயமான கிளர்ச்சிக்கு உண்டு எனத் தெரிவித்துக்கொண்டார்கள்.

தோழர் ஆர். கோவிந்தராசன் நன்றி நவின்றார்.

'மத்திய மந்திரி சபைக் கூட்டங்களில் நான் கலந்துகொள்வதில்லை'

குற்றச்சாட்டை மறுக்கிறார் தேபர்

பாட்னா, ஜுன் 30—
டில்லி மந்திரிசபைக் கூட்டங்களில் காங்கிரஸ் தலைவர் தேபர் கலந்துகொள்வதாக பிரஜா-சோஷலிஸ்டு கட்சிப் பொதுச்செயலாளர் திரிலோக்சிங் கூறிய குற்றம் சாட்டை, காங்கிரஸ் தலைவர் தேபர் இங்கு மறுதலித்திருக்கிறார்.

"நான் சௌராஷ்டிர மாநில முதன் மந்திரியாக இருந்தபோது, ஓரிரு முறைகள் டில்லி மந்திரிசபைக் கூட்டத்தில் கலந்துகொண்டிருக்கலாம்; ஆனால், காங்கிரஸ் கட்சித் தலைவரான பிறகு, மந்திரிசபைக் கூட்டங்கள் நடக்கும் கட்டிடத்தின்வாயிற்படியைக்கூட எட்டிப் பார்த்தது இல்லை; அப்படியிருக்க, தோழர் திரிலோக் சிங்கின் குற்றச்சாட்டு ஆதாரமற்றதாகும்,"
என்று, தேபர் கூறியிருக்கிறார்.

வேலியே பயிரை மேய்வதாகப் புகார்

உதவி நிதி ஏழைக் கைத்தறியாளருக்குக் கிடைப்பதில்லையா?

கைத்தறியால் முடியுமானல் விசைத் தறியைப் புகுத்துவானேன்?

மந்திரி சுப்பிரமணியம் கேட்கிருர்

சென்னை, ஜூலை 2—

வேலியே பயிரை மேய்கிறதா? மேய்வதாகப் புகார் வருகிறது.

கைத்தறி செஸ் நிதியிலிருந்து வழங்கப்படும் உதவித் தொகை, அவதியுறும் ஏழை நெசவாளர் கையில் கிடைப்பதில்லை என்று புகார் கூறப்படுகிறதாம், சர்க்காரிடம்!

இந்தப் புகாருக்கு இடம் தராமலிருக்க வேண்டுமென கூட்டுறவு நெசவாளர் சங்கங்களைக் கேட்டுக் கொண்டிருப்பதாக மந்திரி சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிருர்.

கூட்டுறவு இலாகா தலைமை அதிகாரியும், கைத்தறி இலாகா டைரக்டரும் இது குறித்து ஆவன செய்ய வேண்டுமெனவும் மந்திரியார் கேட்டிருக்கிருராம்.

கைத்தறி நெசவாளர்கள், துணி வாங்குவோரின் விருப்பத்திற்கு ஒப்ப புதிய ரகத் துணிகளை நெய்ய வேண்டும் என்றும், துணிகள் நல்ல தரமானவையாக இருக்க வேண்டும் என்றும், உள்நாட்டுத் தேவைக்கு ஒப்ப மட்டுமின்றி வெளிநாட்டு ஏற்றுமதிக்கு உகந்தாயும் துணி நெய்ய வேண்டும் என்றும் மந்திரி கைத்தறியாளர்களுக்கு உபதேசித்திருக்கிருர்.

"விசைத் தறியினுல் கைத்தறிக்கு தீங்கு ஏற்படுமா என்பதை நாம் நன்கு யோசிக்க வேண்டும். இதுவரை விசைத் தறியை சென்னை சர்க்கார் எதிர்த்து வந்திருக்கிறது.

"அகில இந்திய ரீதியில் தேவையைக் கணக்கிட்டுப்பார்த்து, அதைப் பூர்த்தி செய்வது கஷ்டமாக இருக்கும் எனக் கருதி, விசைத் தறியைப் புகுத்த தற்போது மத்திய சர்க்கார் முன்வந்திருக்கிருர்கள்.

"கைத் தறியினுல், (தேவையைப் பூர்த்திசெய்ய) முடியும் என்ருல் விசைத் தறியைக் கொண்டு வரவேண்டிய அவசியமே இல்லை. விசைத் தறி புகுத்தப்படும் அளவுக்கு கைத் தறி பாதிக்கப்படும் என்பதிலும் சந்தேகமில்லை,

"கைத்தறித் தொழிலைப் புறக்கணிப்பதற்கில்லை. இத்தொழிலில் ஈடுபட்டுள்ள இலட்சக் கணக்கானவர்களை வேறு தொழிலுக்குத் திருப்ப நமக்கு வசதி இல்லை; அதனுல் இத் தொழில் நீடித்தாகவேண்டும். இன்னும் அதிகமாக தறிகளை உண்டாக்குவது கடினம்; அதற்கு ஒரு அளவு நிர்ணயித்துக் கொள்ளவேண்டும். அதாவது, நூற்றுக்கு பத்து பங்கு கூடுதலாக்குவது என்று வைத்துக் கொள்ளலாம். அதற்கு மேல் துணி உற்பத்தியைப் பெருக்க, உற்பத்தி முறைகளைப் புதிதாகக் கையாள முற்படுவது தான் விவேகம்,"

என்றும் மந்திரி சுப்பிரமணியம் கருத்து வழங்கிஞராம்

பீகார் வெள்ளம்!

முசபர்பூர், ஜூலை 1—

முசபர்பூர் மாவட்டத்தின் பாக்மதிபூரி, கண்டக், ராய்ராணி, பக்கண்டே முதலிய நதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, 200 சதுரமைல் தூரம் ஒரே தண்ணீர்க் காடாகிவிட்டதாகவும், இதனுல் $2\frac{1}{2}$ இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதுடன் ரூ. 8 இலட்சம் பெறுமானமுள்ள பயிர்கள் சேதமுற்றிருப்பதாகவும் கூறப்படுகிறது.

பெண்ணின் பெருமை!

பாட்ஞ, ஜூலை 2—

சமயோசித அறிவுடன் நல்ல துணிச்சலும் சேர்ந்த வீரமங்கையொருத்தி, புல்கட்டின் துணையால் புலியை வென்ற சம்பவம் ஒன்று இங்கு நிகழ்ந்துள்ளது.

பாட்ஞவுக்கருகிலுள்ள மக்கள் நடமாட்டம் சிறிதுமில்லாத ஒரு குன்றின் வழியே பெண்ணொருவள் புல் கட்டுடன் தன் இல்லத்திற்கு சென்றுகொண்டிருக்கையில் எதிர்பாராதவிதமாக எதிரே ஒரு புலி வந்தது. அவள் சற்று யோசித்து, துணிச்சலுடன் திடமான ஓர் முடிவுக்கு வந்தாள். புலி தன்னை நெருங்க வந்ததும் புல் கட்டை தனக்கு முன்னுல் வைத்து மறைத்துக்கொண்டாள்; புல் கட்டுக்குப் பின்னுல் புலி நின்றது. அசைவற்று அப்படியே நின்றது; அவள் புல்கட்டைக் கொண்டே புலியை கொஞ்சம் கொஞ்சமாக பின்னுல் நகர்த்திஞள். அருகிலுள்ள ஓர் பாறையின் ஓரத்திற்கு வந்ததும் திடீரென தன் முழு சக்தியுடன் வேகமாக புல் கட்டைத் தள்ளிஞள்; புல்கட்டும் புலியும் ஆழமான பள்ளத்தில் உருண்டன!

என்னே வீரம்! சமயோசித புத்தி!

ஒளி பெற! வழி அறிய!

இந்தித் திணிப்புக் குழு ரஷ்யாவிற்கு ஓடுகிறது

புதுடில்லி, ஜூலை 2—

மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் ரஷ்யா எப்படி நடந்துகொண்டிருக்கிறது என்பதைக் கண்டறிய, அரசாங்க மொழிக் குழு என்ற பெயருடைய இந்தித் திணிப்புக் குழுச் செயலாளர் எஸ். ஜி. பார்வே என்பார், ரஷ்யா செல்வார் என்று தெரியவருகிறது.

ரஷ்யாவிலும் இப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டியிருப்பதாயும், வட்டார மொழிகளுக்குப் பாதகமின்றியில் ஒரு மொழியை அரசாங்கப் பொது மொழியாக ஏற்பது பற்றி கவனம் செலுத்த வேண்டியுள்ளது என்றும் இந்தித் திணிப்புக் குழு கருதுகிறதாம்.

ரஷ்யாவின் அனுபவங்கள் இந்தியாவிற்கு வழிகாட்ட முடியும் என்றும் கருதப்படுகிறதாம்.

குழு தன் அறிக்கையை இத்திங்கள் இறுதிக்குள் தாக்கல் செய்யுமாம்.

குறிப்பு:—இலங்கையில் சிங்களத்தைத் திணிப்பதற்கான சமூக, வழிவகைகளைக் கண்டறியும் பொருட்டு சர்க்கார் பிரதிநிதிகள், இந்தியா வருவதாக ஏற்கனவே ஒரு தகவல் வெளிவந்திருக்கிறது.

பாலாறு நீர்த் தகராறு

பேச்சு வார்த்தைகளில் முடிவு

பெங்களூர், ஜூலை 2—

பாலாறு தண்ணீரைப் பகிர்ந்து கொள்வதை ஒட்டி சென்னை — மைசூர் மாநிலங்களிடையே நெடுங்காலமாக இருந்துவந்த தகராறுக்கு இன்று இங்கு தீர்வு காணப்பட்டிருக்கிறது.

மத்திய நீர் பங்கீட்டுக் குழு உறுப்பினரான எல். பி. பர்காவா என்பார் தலைமையில், இருமாநிலத்தையும் சேர்ந்த தலைமை எஞ்சினீயர்கள், தகராறு குறித்து விவாதித்து முடிவு கண்டனர் என்று தெரியவருகிறது.

மைசூர் சர்க்கார் பெத்தமங்கலா, ராமசாகரம் குளங்களில் அனுமதிக்கப்பட்ட அளவுக்குமேல் பாலாறு நீரைத் திருப்பிவிடுவதின் மூலம், 1892-ம் ஆண்டு ஒப்பந்தத்தை மீறுவதாக சென்னை சர்க்கார் குற்றம் சாட்டியது.

பேச்சு வார்த்தைகளைத் துவங்கு முன், இடங்களை நேரில் சென்று இரு அதிகாரிகளும் பார்வையிட்டனர் என்றும், அதன் பின்னர் கூடிப் பேசும்போது சென்னை கூறிய குற்றச் சாட்டிற்கு ஆதாரம் இல்லை என்று முடிவாகியதாயும் மேற்கொண்டு தகராறுகள் கிளம்பினுல் அவற்றைத் தீர்க்கவும் வழி துறைகளையும் மாநாடு ஆலோசித்ததாயும் கூறப்படுகிறது.

மலையாளிகள் புகாரின் எதிரொலி

'தேக்கு மரம் வெட்டுவதை நிறுத்துக'

சென்னை சர்க்காரின் உத்தரவு

சென்னை, ஜூலை 2—

கோயம்புத்தூர் தென் பகுதி காட்டிலாகா அதிகாரிகளுக்கு, தேக்கு மரம் வெட்டுவதை உடனடியாக நிறுத்துமாறு தந்தி மூலம் சென்னை சர்க்கார் உத்தரவு அனுப்பியுள்ளனராம்.

வனசாத தேக்கு மரங்களை வெட்டிவிடுவதாக மலபாரிலிருந்து சர்க்காருக்கு வந்த புகாரின் பேரிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டிருப்பதாக மந்திரி சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிருர்.

தேக்கு மரம் வெட்டுவது வழக்கம்போலவே நடைபெறுவதாக அறிவித்த பின்னும், புகார்கள் தொடர்ந்து வந்துகொண்டிருந்ததால்தான் இந்த நடவடிக்கை என்றும் சர்க்கார் சார்பில் கூறப்பட்டிருக்கிறது.

இந்தப் புகார்களுக்கு ஏதேனும் ஆதாரம் உண்டாவென்பதை ஆராய்ந்த பின்னர் சர்க்கார் மீண்டும் அறிக்கை தரும் என்றும் தெரியவருகிறது.

வரவு-செலவுத் திட்டம் அம்பலமானதற்கு நிதி மந்திரியே முழுப் பொறுப்பாளி

பெப்சு மாநில விசாரணைக் குழு தீர்ப்பு

பாட்டியாலா, ஜூலை 2—

'பட்ஜெட்' என்ற வரவு-செலவுத் திட்டம், மாநில சட்டசபையில் தாக்கலாகுமுன் வெளியிடப்பட்டது குறித்து ஆராய, பெப்சு மாநிலத்தில் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு, 'சம்பவத்திற்கு மாநில நிதி மந்திரியே பொறுப்பாளி' என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

1956—57-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம முன்கூட்டியே வெளியிடப்பட்டது குறித்து ராஜா சுரேந்திர சிங் தலைமையில நியமிக்கப்பட்ட அந்த விசாரணைக் குழு, மேலும் கூறியிருக்கும தகவல்களாவன :—

"நிதிமந்திரி சட்டசபையில் வரவு-செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்து பேசுவதற்கு 90 நிமிடங்களுக்கு முன்பாகவே, வானொலியில் அது ஒலிபரப்பப்பட்டது.

"நிதி மந்திரியின் கட்டளையின் பேரில், திட்டத்தின் சுருக்கமும், சொற்பொழிவும் பத்திரிகை பிரதிநிதிகளுக்குத் தரப்பட்டது.

"திட்டத்தின் புனிதத் தன்மையும், பார்லிமெண்டரி பண்பாடும் காப்பாற்றப்பட்டிருக்க, நிதிமந்திரி உடனே பதவியிலிருந்து விலகியிருக்க வேண்டும்.

"ஆனுல், இதுபோல முன் கூட்டியே, பத்திரிகைகளுக்கு விவரம் வழங்கும் முறை கடந்த இரண்டு ஆண்டுக்காலமாக நடைபெற்று வருவதால், நிதிமந்திரி மீது எத்தகு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை சட்டசபையே தீர்மானிக்க வேண்டும்."

எதிர்ப்பின் எதிரொலி!

வருமானம் குறைந்துவிட்டதால் பஸ் போக்குவரத்தை நிறுத்தினர்

சான்பிரான்சிஸ்கோ, ஜூலை 2—

அமெரிக்காவைச் சேர்ந்த பிளாரிடாவிலுள்ள 40,000 நீக்ரோ மக்களும பஸ் பிரயாணம செய்யாமல் பகிஷ்கரித்ததின் விளைவாக, அந்தப் போக்குவரத்து நிறுவனத்திற்கு 60 சதவிகிதத்திற்கு மேல் வருமானம் குறைந்துவிட்டது; இதன் விளைவாக, பஸ் போக்குவரத்து நிறுத்தப்பட்டுவிட்டது. நீக்ரோ சமுதாயக் கவுன்சில்; தனக்குச் சொந்தமாக ஒரு போக்குவரத்து நிறுவனம் ஏற்படுத்தத் தீர்மானித்துள்ளது என்று செய்தி ஒன்று கூறுகிறது.

நீதி மன்ற...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கையை பார்வையாளர் பலரும் பாராட்டுகின்றனர். ஆனுல், காங்கிரஸ் தலைவரின் கட்டளைப்படியே, காங்கிரஸ் பொதுச்செயலாளர் விசாரணையை மேற்கொள்ளுவார் என்று அறிவிக்கப்பட்டிருக்கும் போது, ஆசாத் எப்படி இப்படி ஒரு அறிக்கை விடுத்தார் என்பது இன்னும் விளங்காத ஒன்ருக இருக்கின்றதாம்.

தென்னுட்டிற்குச் சலுகை தரப்படுவதாக வடநாட்டவர் புகார் செய்கின்றனராம்!

வேலூர், ஜூலை 2—

மந்திரிகள் என்ருலே, அவர்கள், மனிதர்கள் என்ற நிலையிலிருந்து மாறுபட்டு விட்டவர்களோ என்ற ஐயம் அடிக்கடி ஏற்படும் வகையில் சில மந்திரிகளாயிருக்கும் 'பெம்மான்'கள் பேசுகின்றனர்!

தென்னுடு டில்லி சர்க்காரால் புறக்கணிக்கப்படுவதாக சில அரசியல் கட்சிகள் புகார் கூறுகின்றனவாம்!

மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறியிருக்கிருர், இப்படி!

ஆனுல், தென்னுட்டவரைப் போலவே வடநாட்டவரும் புகார் கூறுகின்றனராம்!

தொழில் இலாகா மந்திரி ஒரு 'மதறாசி'யாக இருப்பதால், எல்லா விவகாரங்களிலும் தென்னுட்டிற்கே முதலிடம் தரப்படுவதாக வடவர் புகார் கூறுகின்றனராம்!

இதையும், அமைச்சர் டி. டி. கே.தான் கூறியிருக்கிருர்!

கழகக் கூட்டம்

★

கே. பரமத்தி
(கரூர் வட்டம்)
5—7—56 மாலை 6 மணிக்கு
தலைவர் :
ஆர். இராமசாமி
பேசுவோர் :
ஈ. வெ. கி. சம்பத்
என். ஆர். இராமசாமி
எஸ். நல்லுசாமி
எம். கே. கரிகாலன்

சென்னை நகர மாணவர்கட்கு:

"நடைமுறை ஆண்டில், சென்னை நகர தி. மு. க.—மாணவர் கிளையை நல்ல முறையில் இயக்குவதற்காக ஆய்வுக் கூட்டம் ஒன்று, சென்னை-இராயபுரம், 'அறிவக'த்தில், 8—7—56 காலை நடைபெறவிருக்கின்றது.

"சென்னை நகர தி. மு. க.—மாணவர் கிளையின் பணியில் பற்றுடைய மாணவர்கள் அனைவரும் அன்று வருகை தருமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

"கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகள் அனைத்தும் குறைந்தது 2 பிரதிநிதிகளை அனுப்பிவைக்க வேண்டுகிறேன்.

"சென்னை நகரிலுள்ள அமைப்புக் குழு உறுப்பினர்கள் சென்னை நகரைச் சார்ந்த கிளைக் கழக நிர்வாகிகள் ஆகியவர்களைத் தவருமல் கலந்துக்கொள்ள பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்,"

என்று, தி.மு.க—மாநில மாணவர் கிளை அமைப்பாளர் தோழர் டி. கே. பொன்னுவேலு அறிவிக்கிருர்.

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

சுற்றுப்பயணம்

ஜூலை 6 : சென்னை
,, 8 : புவனகிரி
,, 9 : பந்தநல்லூர்
,, 13 : தியாகராயநகர்

தேனி நெடுஞ்செழியன் மன்றம்

4—7—56 அன்று மேற்படி மன்றச் சார்பில், தோழர் கே. பி. பி. எம். நாராயணசாமி தலைமையில், ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் கோவை-செழியன், சிற்றுளி-சுப்பிரமணியம், இராமசாமி, மு. தங்கராசன், ரெ. சமுத்திரக்கனி ஆகியோர் பேசுவர்

கொள்கையளவில் சம்மதித்துவிட்டதாம்!

இலங்கையிலுள்ள தன்னுடைய தளங்களைத் திரும்பப் பெற, கொள்கையளவில் பிரிட்டன் ஒப்புக்கொண்டு விட்டதாக இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா அறிவித்துள்ளார்.

திராவிட நாட்டுச்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மரம் 13 அடி நீளமும், 188 அங்குலம் சுற்றளவு கொண்டதாயும் இருந்ததாகவும் தெரிய வருகிறது.

கோச்சியில் உள்ள இந்த பரம்பிக்குளம் காடுகள், நூககமர உற்பத்தியில் உலகப் புகழ் பெற்றவையாகும்!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.